R5277

## CROSSING THE RED SEA

# சிவந்த சமுத்திரத்தைக் கடத்தல்

யாத்திராகமம் 14 : 19-31

''அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்.'' - ஏசாயா 65:24

இஸ்ரயேலர்கள் அற்புதமாக சிவந்த சமுத்திரத்தை கடந்தது பற்றியும் பிற்பாடு அதில் எகிப்திய படைகள் முற்றிலுமாக அழிந்ததையும் பற்றிய வேதாகம கூற்றை விஞ்ஞானிகள் நீண்ட நாட்களாக கேள்வி கேட்டார்கள். இஸ்ரயேலில் புருஷர்கள் மாத்திரம் 600,000 பேர், எல்லாரையும் சேர்த்து 20,00,000க்கும் மேலாக என்பதையும் அவர்கள் கேள்வி கேட்டார்கள். எனினும் கடைசியாக வேதாகமம் வெற்றிக் கொண்டது. நமது தவறான புரிந்து கொள்ளுதலுக்கு தவறான மொழி பெயர்ப்பும் சரியாக விளக்கப்படாததுமே அடிப்படை காரணம்.

வேதவாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள அலாஃப் (Alaf) என்ற எபிரேய வார்த்தை ஓர் ஆயிரத்தையும் மற்ற சமயங்களில் ஒரு கூட்டத்தையும் குடும்பங்களையும் அல்லது கூடாரங்களையும் குறிப்பதாக பேராசிரியர் ஃபிலிண்டர்ஸ் பெட்ரி (Prof. Flinders Petrie) நமது கவனத்தை ஈர்க்கிறார். இதே மாதிரி ஆயிரம் பேர் கொண்ட ஒரு குழுவை ரெஜிமெண்ட் என்று குறிப்பிடுகிறோம். விசேஷமாக போருக்கு பிறகு இன்னும் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அதையும் ரெஜிமெண்ட் (பட்டாளம்) என்று அழைக்கிறோம். "யூதா 74,600" என்பது "74 குடும்பங்கள் அல்லது கூடாரங்கள் எல்லாவற்றிலும் 600 புருஷர்கள்" என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். "தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே பிரயாணப்பட்டு போனார்கள்." (எண்ணாகமம் 2:34)

இப்படியாக கணக்கிடப்பட்டு எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரயேலர்கள் சேனை புருஷர்கள், ஸ்திரீகள் மற்றும் குழந்தைகள் உட்பட மொத்தம் 30,000 பேர் இருநூறு வருடங்களுக்கு கொஞ்சம் அதிகமான காலத்தில் யாக்கோபின் சந்ததியினர் இவ்வளவு பேர் உண்டாயிருந்தது நல்ல ஒரு சேனை தான். இஸ்ரயேலர்கள் தங்களைக் காட்டிலும் ஜனத்தொகையில் மிஞ்சிவிடுவார்கள் என்று பயந்து இஸ்ரயேலர்களின் குழந்தைகளை அழிப்பதற்கு எகிப்தியர் கட்டளையிட்டும் கூட இஸ்ரயேலர்கள் சந்தான விருத்தியுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இது சாட்சியமாக இருந்தது.

### அற்புதங்களுக்கான அவசியம்

ஒரு அற்புதமானது இயற்கையின் சட்டத்திற்கு மாறாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒரு ஆச்சரியமான, வழக்கத்திற்கு மாறான சம்பவம் மானிட காரியங்களில் தெய்வீக வல்லமையின் குறுக்கீடு, அது இயற்கை சட்டங்களால் உறுதி பண்ணப்பட்டால் கூட அது ஒரு அற்புதமாக இருக்கும். ஒரு அவசியம் இல்லாமல் தேவன் அற்புதங்களை நிகழ்த்தமாட்டார்.

பாலஸ்தீனாவை நோக்கி மூன்று சாலைகள் எகிப்திலிருந்து சென்றன. ஆனால் ஒன்று இராணுவ சுவருடன் மத்திய தரைக்கடலிலிருந்து செங்கடல் வரை அந்நியர் படையெடுப்பை தடுப்பதற்காக இருந்தது. எகிப்துக்கு செல்லும் இந்த சாலைகள் நல்ல பலமான இரும்பு வாயிற்கதவுகளால் பாதுகாக்கப்பட்டன.

இவைகளில் ஒரு சாலை பெலிஸ்தரின் நாட்டுக்கு செல்லக்கூடியது. ஜனங்கள் கூட்டமாக செல்ல தடை பண்ணப்பட்டிருந்தது. இரண்டாவது சாலை மணல் நிறைந்த பாலைவனமாக இருந்தது. அங்கு தண்ணீரும் தீவனமும் இல்லை. ஆகையால் அது முற்றிலுமாக தகுதியற்றதாக இருந்தது. மூன்றாவது சாலையைத் தான் இஸ்ரயேலர்கள் தெரிந்து கொண்டார்கள். அது சீனாய் மலையின் வனாந்தரமாக இருந்தது. அங்கே மேய்ச்சல் நிலத்தை கண்டார்கள்.

எகிப்தியர்களின் முதற்பேறானவர்களின் மரணத்திற்கு பிறகு, இஸ்ரயேலர்கள் யாத்திரையை ஆரம்பித்து செங்கடலை அடைவதற்கு முன்பு அநேக நாட்கள் கடந்தன. இந்த நாட்களில் பார்வோனும் அவனது ஜனங்களும் அவர்களது துக்கத்திலிருந்து ஓரளவுக்கு மீண்டிருந்தனர். இஸ்ரயேலர்க எகிப்தைவிட்டு வெளியேற சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டபோது, இஸ்ரயேலர்கள் எந்த வழியாக செல்வது என்று அலைந்திருப்பார்கள் என்று உணர்ந்தான்; அவர்கள் தங்களது புதிய சுதந்திரத்தாலும் பிரயாணத்தினாலும் களைத்திருப்பார்கள் என்று தீர்மானித்து, அவர்களை திருப்பி கொண்டு வருவது சுலபமானது என்று பார்வோன் முடிவு செய்தான். வாயிற்கதவுகள் மூட கட்டளையிடப்பட்டு, நூற்றுக்கணக்கான ரதங்களும் காலாட்படைகளும் இஸ்ரயேலர்களை பின் தொடர அனுப்பப்பட்டன.

இதற்கிடையில் இஸ்ரயேலர்கள் இரண்டு மலைத் தொடர்களிடையே கடந்து, செங்கடலின் வடக்கு பகுதியில் சூயஸ் வளைகுடாவுக்கு சென்றிருந்தனர். இஸ்ரயேலர்கள் தப்பிக்க இயலாதபடி பட்டிக்குள் சென்றிருந்தனர். தேவன் எகிப்தியர்களுக்கு மேலாக மேகம் அல்லது பனி மூட்டத்தையும் இஸ்ரயேலரது பாளையத்துக்கு மேலாக பிரகாசமான வெளிச்சத்தையும் ஏற்பாடு செய்திருந்தார். இப்படியாக எகிப்தியர்கள் தாமதப்படுத்தப்பட்டார்கள். இஸ்ரயேலர் கடற்கரை மட்டும் வந்து அங்கே தொடர்ந்து போக முடியாமல் தடைபட்டார்கள். பிறகு அவர்கள் மோசேயிடமும் தேவனிடமும் கூக்குரலிட்டார்கள். அதைரியம் அடைந்து திரும்ப எகிப்தின் அடிமைத்தனத்துக்கு செல்ல அனுமதி கேட்டார்கள். போராடுவதற்கு பதிலாக நல்ல முறையில் சரணடைவதை விரும்பினார்கள்.

ஆனால் மோசேயின் மூலமாக கர்த்தரின் வார்த்தை, ஜனங்கள் தைரியமாக இருக்க வேண்டும் என்றும், சீக்கிரத்தில் அவர்களது துன்பத்திலிருந்தும் எதிரிகளிடமிருந்தும் யேகோவா தேவன் அவர்களை விடுவிப்பதை காண்பீர்கள் என்றும் அறிவித்தது. இதற்கிடையில் காற்றானது வடக்கிலிருந்து வீச, தண்ணீரானது கொஞ்சம் கொஞ்சமாக தெற்கு பக்கமாக பின்வாங்கியது. மணல் தெரிய அதில் இஸ்ரயேலர்கள் அடுத்த பக்கம் கடந்து சென்றார்கள். பனியால் மூடப்பட்டிருந்த எகிப்தியர்கள் ஒரு வேளை வழக்கமாக தண்ணீரால் மூடப்பட்டிருந்த தரையில் செல்கிறோம் என்பதை அறியாமல் சென்றார்கள்.

எகிப்தியர்கள் ஈரமான மணலை அடைந்தபோது புதிதான சிரமங்களை அனுபவித்தனர். இரதத்தின் சக்கரங்கள் மணலில் அமுங்கினதால் குதிரைகள் மெதுவாக சென்றன, பிறகு சக்கரங்கள் உடைந்ததால் பின்வாங்கின. எகிப்தியர்கள் காரணத்தை புரிந்து கொண்டு சுதாரிக்கும் வரை, அந்த காலத்துக்குரிய உருவ பாஷையில் மேக ஸ்தம்பங்களிலிருந்து தேவன் ஒரு தீய (கோப) கண்ணுடன் அவர்களை பார்த்தார். ஒருவேளை அங்கே மின்னல்கள் போன்ற வெளிப்பாடுகள் இருந்திருக்கலாம். இஸ்ரயேலர்களை பின்தொடர்ந்து போவதை விட்டு திரும்பி போக தீர்மானித்தார்கள். இதற்கிடையில் காற்றின் திசை மாறி, தெற்கிலிருந்து வீசியது. அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு முன்னதாக தண்ணீர் அவர்கள் மேல் வந்தது; அவர்கள் புதைந்து சீக்கிரத்தில் அழிக்கப்பட்டார்கள்.

இந்த பதிவில் விசுவாசத்தை தடுமாறச் செய்யும்படி எதுவுமில்லை. எந்த விசேஷித்த சூறாவளி இல்லாமல், காற்றின் மாற்றத்தினால் டொலேடோ என்ற இடத்தில் ஏரி (Erie) என்ற ஏரியின் தண்ணீர் பதினைந்து அடி வரை வேறுபடுகிறது என்று அமெரிக்க அரசின் அறிக்கைகள் காண்பிக்கின்றன. இஸ்ரயேலர்கள் கடலைக் கடந்த போது இரு பக்கமும் கடலானது சுவர் போல இருந்தது என்ற அறிக்கை நமது விசுவாசத்தை தடுமாறச் செய்திருந்தது. ஆனால் சுவர் என்ற வார்த்தை அதன் பரந்த அர்த்தத்தில் வெறும் அரணை குறிக்கிறது. இதே அர்த்தத்தில் அமெரிக்க தேசமானது ஒரு பக்கம் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் இன்னொரு பக்கம் பசுபிக் சமுத்திரத்தையும் பாதுகாப்பு சுவராக கொண்டிருக்கிறது என்று நாம் கூறுகிறதற்கு ஒப்பாக இருக்கிறது.

இப்படியாக வேதாகமமானது கொஞ்சம் பொது அறிவுடன் விளக்கப்பட்டால் அது முற்றிலும் அறிவிற்கு ஏற்புடையதாக இருக்கிறது. மேலும் வேதமாணவர்கள் அதன் நியாயத்தன்மையை மாத்திரமல்ல அதன் அறிவுச் செல்வத்தையும் பரத்திலிருந்து ஞானத்தையும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

## கர்த்தரின் தூதன்

இரவில் இஸ்ரயேலர்களுக்கு வெளிச்சத்தையும் எகிப்தியர்களுக்கு இருளையும் கொடுத்த மேகஸ்தம்பம் அல்லது மூடுபனியாகவோ இருந்தது. அது கர்த்தருடைய தூதன் என்றோ அல்லது அதில் கர்த்தருடைய தூதன் இருந்தார் என்றோ சொல்லப்படுகிறது. பொதுவாக ஆவியின் ஜீவிகள், மானிட விவகாரங்களில் யேகோவாவினுடைய தூதர்களாக இருக்கிறார்கள். உதாரணத்திற்கு அர்ப்பணம் செய்த அனைத்து தேவனுடைய பிள்ளைகளும் அவருடைய சேனாபதியாக, ஊழியர்களாக, தாசர்களாக இருப்பதாக அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.

தூதன் என்ற வார்த்தை வேதவாக்கியங்களில் இன்னும் பரந்த அர்த்தத்தில் மானிட விவகாரங்களில் அப்பியாசப்படுத்துகிற தெய்வீக வல்லமையை குறிக்கிறது. பரிசுத்த பவுல் எழுதுகிறதாவது: தேவன் ''தம்முடைய தூதர்களை காற்றுகளாகவும் தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜீவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது.'' (எபிரேயர் 1:7) உதாரணத்திற்கு அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பின் இராணுவத்தை மரணத்தில் அடித்தது போல பார்வோனின் இராணுவம் அடிக்கப்பட்டதாக இந்த பாடம் விவரிக்கிறது.

வேத வாக்கியங்கள் குறிப்பிடுகிற பயன்படுத்தப்பட்ட இராணுவமாக கர்த்தருடைய தூதனே இருந்தாரா அல்லது இயக்கப்பட்ட இராணுவத்துக்கு பொறுப்பேற்று பயன்படுத்தினாரா என்பது முக்கியமில்லை. இரண்டு காரியத்தில் பலன் ஒன்று தான். இயற்கையின் (பஞ்ச) பூதங்கள் மூலமாக நேரடியாகவோ அல்லது இடையிலே ஆவியின் ஜீவிகள் மூலமாகவோ யோகாவாவின் நாமம் மற்றும் வல்லமையில் இயற்கை சக்திகளை கட்டளையிடுவதின் மூலம் யேகோவாவின் வல்லமை சமமாக வெளிப்படுத்தப்படுகிறது.

நிழலான இஸ்ரயேலர்களின் சார்பில், தெய்வீக வல்லமையின் வெளிப்பாடுகள் பற்றிய அநேக மதிப்புமிக்க பாடங்கள் கிறிஸ்தவர்களுக்கு இருக்கின்றன. இதே தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை பாவம் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க விருப்பம் உள்ளவராகவும் வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார் என்பதையும் குருதி தோய்ந்த கடல் துன்பத்தின் மூலமாகவும் தப்பிக்கும் வழியை ஏற்படுத்த வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை விளக்குவதிலும் கூட அங்கே நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. நாம் பார்ப்பது போல அது நமக்கு மென்மேலும் தெளிவு, எளிமை மற்றும் அழகுடன் திறக்க ஆரம்பித்து, தேவனிடத்திலும் அவரது வெளிப்படுத்துதலிலும் நமது விசுவாசத்தை அபிவிருத்தி செய்கிறது. இந்த வெளிப்படுத்துதல்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் மூலமாக கொடுக்கப்பட்டவை.

இஸ்ரயேலர்கள் தங்களது துன்பங்களை அறியும் முன்பே, தேவன் அவர்களது காரியங்களை ஏற்பாடு செய்து, அவர்கள் எல்லா வழிகளிலும் அடைக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்திருந்ததைப் போல, அதே தேவன் நமது அனைத்து துன்பங்களையும் முன்னறிந்து அதிலிருந்து நம்மை காக்கவும் மீட்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார். நமது நிலைமையை உணர்ந்து, விசுவாசத்துடன் அவரிடம் நாம் கூக்குரலிட வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறார். ''அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்.'' நாம் சில சமயங்களில் மனிதனால் சாத்தியமாகும் அனைத்தையும் செய்து முடிவில் இருப்போம். அதன்பிறகு தான் மோசே சொன்ன இந்த வார்த்தைகளை நாமே நமக்கு பொருத்திபார்க்க வேண்டும். ''நீங்கள் நின்று கொண்டு கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்.''